ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2115/8 - 2019 මාර්තු මස 18 වැනි සඳුදා - 2019.03.18
*2115/8 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச. வ. பி. 1/2012* (III)

**1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டம்**

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 6, 7, 8, 9 மற்றும் 10 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் சொல்லப்பட்ட சட்டத்தின் 61 ஆம் பிரிவின்கீழ் கமத்தொழில், கிராமிய பொருளாதார அலுவல்கள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

பீ. ஹரிசன் (பா. உ.),
கமத்தொழில், கிராமிய பொருளாதார அலுவல்கள்,
கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் கடற்றொழில்,
நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
*2019, மாச்சு 14.*

1A - PG 4436 — 2767 (2019/03)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

ஒழுங்குவிதிகள்

1996 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 7 ஆந் திகதிய 948/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1996 ஆம் ஆண்டு மீன்பிடித் தொழிற்பாட்டு ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :-

(1) அவ்வொழுங்குவிதியின் 2 ஆம் ஒழுங்குவிதிக்கு உடன்முன்னர் பின்வரும் சொல்லையும் இலக்கத்தையும் உட்புகுத்துவதன் மூலமும் :-

"பாகம் I"

(2) அவ்வொழுங்குவிதியின் 8 ஆம் ஒழுங்குவிதியினை உடனடுத்துப் பின்வரும் ஒழுங்குவிதிகளை உட்புகுத்துவதன் மூலமும் :-

"9. இவ்வொழுங்குவிதிகளின் கீழ் மீன்பிடித் தொழிற்பாடுகளுக்காக வழங்கப்பட்ட உரிமம் ஒன்றினை வைத்திருப்பவர் -

(1) கப்பற் தலைவன் அல்லது கப்பல் முதல்வன் எல்லா நேரங்களிலும் தளத்திலுள்ள படகின் பதிவுச் சான்றிதழுடன் அல்லது அதன் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியுடன் சேர்த்து இலங்கை நீர்ப்பரப்பினுள் மீன்பிடித் தொழிற்பாடுகளுக்கான உரிமம் ஒன்றை வைத்திருக்கின்றார் எனவும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் வேண்டுகோள் மீது படகின் அத்தகைய உரிமத்தையும் படகின் பதிவுச் சான்றிதழையும் காண்பிக்கின்றார் எனவும் ;

(2) மீன்பிடி எதுவும் இவ்வொழுங்குவிதிகளின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றின் அதிகாரத்தின் கீழன்றி இலங்கை நீர்ப்பரப்பின் எந்தப் பாகத்திலும் மேற்கொள்ளப்படலாகாது எனவும் ;

(3) மின்பிறப்பாக்கிகள் எவையும் பின்வரும் வகைகளுக்குச் சொந்தமான ஏதேனும் மீன்பிடிப் படகின் தளத்தில் கொண்டுசெல்லப்படலாகாது எனவும் :-

(அ) மோட்டார் பொருத்தப்படாத பாரம்பரிய படகு (NTRB)
(ஆ) மோட்டார் பொருத்தப்பட்ட பாரம்பரிய படகு (MTRB)
(இ) கரைவலைப் படகு (மோட்டார் பொருத்தப்படாதது) (NBSB)
(ஈ) வெளியிணை மோட்டார் பொருத்தப்பட்ட FRB படகு (OFRP)
(உ) உள்ளிணை இயந்திரம் பொருத்தப்பட்ட நாள் முழுவதற்குமான படகுகள் (ஒரு நாள்).

(4) கப்பற் தலைவன் அல்லது கப்பல் முதல்வன் வெளியினை மோட்டர்கள் பொருத்தப்பட்ட படகுகளுக்குப் பயன்படுத்தப்படும் வெளிச்சம் தரும் மின்குமிழ்களுக்கு மின்சாரத்தை உருவாக்குவதற்காக 12 வோல்டேஜிற்கு மேற்படாத வோல்டேஜ் உடன் கூடிய உலர் மின்கலம் ஒன்றைப் பயன்படுத்துகின்றார் எனவும் ;

(5) ஏதேனும் மீன்பிடி கலத்தில் வெளிச்சமூட்டும் நோக்கத்திற்காக செயற்கையான மின்குமிழ்களைப் பயன்படுத்துகின்ற எவரேனும் ஆள் கீழே குறிப்பிடப்பட்ட ஆகக்கூடிய வோல்ட்டேஜை விஞ்சாத ஒரு வோல்ட்டேஜைப் பயன்படுத்துகின்றார் எனவும் :

| செயற்கையான மின்குமிழ்களின் வகை | மின்குமிழ்களின் எண்ணிக்கை | ஆகக்கூடிய வாற்சுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. பைலமென்ரஸ் மின்குமிழ்கள் | 2 | 60 வாற்ஸ் |
| 2. புளோரெசன்ற் மின்குமிழ்கள் | 2 | 60 வாற்ஸ் |
| 3. எல்ஈடி மின்குமிழ்கள் | 2 | 10 வாற்ஸ் |
| 4. சிஎப்எல் மின்குமிழ்கள் | 2 | 12 வாற்ஸ் |

(6) ஆளெவரும் இலங்கை நீர்ப்பரப்பினுள் மீனைக் கவருவதற்கு செயற்கையான வெளிச்சத்தைப் பயன்படுத்தவில்லை எனவும்,

ஆயினும், எவ்வாறாயினும், தூண்டில் கயிறு, மீன்பிடி, தூர்வலை, கோல் இல்லாத தூண்டில் கயிறு மற்றும் மீன் பொறிகள் என்பனவற்றைக் கொண்டு சிறிய அளவிலான மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்ற ஆட்களுக்கான தேசிய நீர்வாழ் உயிரின வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையுடன் கலந்தாலோசித்து செயற்கையான வெளிச்சத்தைப் பயன்படுத்துவதற்கு பணிப்பாளர் தலைமையதிபதியினால் விசேட அனுமதி வழங்கப்படலாம்.

(7) ஏழு (07) மைல்கள் கடல் எல்லையினுள் அல்லது ஆறு தசம் சைபர் எட்டு (6.08) கடல்மைல்கள் கடல் எல்லையினுள் அதாவது கரையோரத்திலிருந்து பதினொன்று தசம் இரண்டு ஆறு கிலோ மீற்றருள் (11.26 கி. மீ.) கடல் எல்லையிலுள்ள இலங்கை நீர்ப்பரப்பினுள் மீன்பிடித் தொழிற்பாடுகளுக்காக ஆளெவரும் சூழ்வலைகளைப் பயன்படுத்தவில்லை எனவும்,

உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

10. பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவர் சார்பில் அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், எவையேனும் ஜிபிஎஸ் சாதனங்கள் மற்றும் கப்பல் அடியின் கீழ் உள்ள கடல் ஆழத்தை எதிரொலி மூலம் கணித்துக்காட்டும் கருவி என்பவற்றை ஏதேனும் மீன்பிடிப் படகின் தளத்தில் கொண்டு செல்வார்களாயின் அதனை உரிமத்தில் குறித்துக்காட்டுதல் வேண்டும்.

## பாகம் II

11. இலங்கை நீர்ப்பரப்பினுள் சுழியோடி மீன்பிடிக்கும் தொழிற்பாட்டில் ஈடுபடுகின்ற எவரேனும் ஆள் மு. ப. 6.00 மணி தொடக்கம் பி. ப. 6.00 மணிக்கு இடையே பகல் நேரத்தின் போது அத்தகைய மீன்பிடித் தொழிற்பாட்டை மேற்கொள்ளுதல் வேண்டும்.

12. பணிப்பாளர் தலைமையதிபதி எந்த மீன்வகைக்காக சுழியோடி மீன்பிடிக்கும் தொழிற்பாட்டை மேற்கொள்கின்றாரோ அந்த மீன் வகைக்கான தனிவேறான உரிமம் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

13. இவ்வொழுங்குவிதிகளின் கீழ் வழங்கப்பட்ட அத்தகைய ஏதேனும் உரிமம் அனுமதிக்கப்பட்ட மீன் வகையைப் பிடிப்பதற்காக மட்டும் பயன்படுத்தப்படல் வேண்டும்.

14. கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, அம்பாறை, மட்டக்களப்பு, புத்தளம், மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய நிர்வாக மாவட்டங்களில் scuba சுழியோடுவதன் மூலம் சிப்பிகளையும் கடற்கம்பளிப் பூச்சிகளையும் பிடிப்பதில் ஈடுபடுகின்ற எவரேனும் ஆள் கரையோரத்திலிருந்து நான்கு (4) கடல்மைலுக்கு (7.4கிமீ) அப்பால் அத்தகைய மீன்பிடி தொழிற்பாட்டை நிறைவேற்றுதல் வேண்டும்.

ஆயினும் எவ்வாறாயினும் அத்தகைய மீன்பிடித் தொழிற்பாடு திருகோணமலை நிருவாக மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுமாயின் கடல் எல்லையானது கரையோரத்திலிருந்து இரண்டு (02) கடல்மைல்களுக்கு (3.7 கி. மீ.) அப்பால் இருத்தல் வேண்டும்.

15. இலங்கை நீர்ப்பரப்பினுள் scuba சுழியோடி மீன்பிடிக்கும் தொழிற்பாடுகளில் ஈடுபடுகின்ற எவரேனும் கப்பற்தலைவன்/ கப்பல் முதல்வன் scuba மீன்பிடித் தொழிற்பாட்டு உரிமம் பெற்றிராதவரான கப்பற்தலைவனுடன் இரண்டு சுழியோடிகளை மட்டும் அத்தகைய படகுத் தளத்தில் ஏற்றுதல் வேண்டும்.

16. இலங்கை நீர்ப்பரப்பினுள் scuba சுழியோடி மீன்பிடிக்கும் தொழிற்பாட்டில் ஈடுபடுகின்ற எவரேனும் கப்பற் தலைவன் அல்லது கப்பல் முதல்வன் எட்டை விஞ்சாத அத்தகைய எண்ணிக்கையான சிலிண்டர்களை அத்தகைய படகுத் தளத்தில் கொண்டு செல்லுதல் வேண்டும்.

17. scuba சுழியோடி மீன்பிடிக்கும் தொழிற்பாட்டு உரிமம் வைத்திருப்பவர் எவரும் பைவலை மீன்பிடியில் ஈடுபடுவதற்கு அத்தகைய உரிமத்தை பயன்படுத்துதல் ஆகாது.

*18. சிப்பிகள் மற்றும் கடற் கம்பளிப் பூச்சி, சிங்க இறால் மற்றும் அலங்கார மீன் என்பவற்றைப் பிடிப்பதற்கான சுழியோடி மீன்பிடிக்கும் தொழிற்பாட்டு உரிமம் வைத்திருப்பவர் எவரும் ஏதேனும் குத்தீட்டி, குறிவைக்கும் கருவி அல்லது கோள வடிவுடைய சுடுகலன் என்பவற்றை அத்தகைய படகுத்தளத்தில் கொண்டு செல்லுதலாகாது.*

*19. மேலுள்ள நிபந்தனைகளை மீறுகின்றவரான எவரேனும் சுழியோடி மீன்பிடிக்கும் தொழிற்பாட்டு உரிமம் வைத்திருப்பவரின் உரிமம் அத்தகைய மீறுகையை எண்பிப்பதன் மேல் பணிப்பாளர் தலைமையதிபதியினால் உடனடியாக இரத்துச் செய்யப்படல் வேண்டும்.*

**பாகம் III**

*20. பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய நீர்வாழ் உயிரின வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையினால் அல்லது வேறு ஏதேனும் ஆராய்ச்சி நிறுவகத்தினாலான* GPS *வாசிப்புகளின்படி வழங்கப்பட்ட விதப்புரையின் மீது இலங்கை நீர்ப்பரப்பினுள் கம்பப்பொறிவலை (கட்டுதல்) செய்வதற்கு பயன்படும் மூலப்பொருள்களையும் அத்தகைய கம்பப் பொறிவலையை நிர்மாணிப்பதற்கான நிலையையும் தீர்மானித்தல் வேண்டும்.*

*21. ஒவ்வொரு கம்பப்பொறிவலை (கட்டுதல்) உரிமத்தை வைத்திருப்பவர் ஒவ்வொருவரும் இரவில் கம்பப்பொறிவலை (கட்டுதல்) அமைவிடத்தை இனங்காண்பதற்கு வழிகாட்டு வலை பற்றிய ஒளி சமிக்ஞை முறைமை ஒன்றைப் பேணுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.*

*22. கம்பப்பொறிவலை (கட்டுதல்) உரிமத்தைக வைத்திருப்பவர் எவரும் பளிங்குப் பாறைகளின் சுற்றயலில், கடற்பாசியில் அல்லது கடற்புல் பிரதேசத்தில், வேறு கடல்சார் முலையூட்டிகள் வாழும் இடங்களில் மற்றும் கரைவலை மீன்பிடித் தொழிற்பாட்டு பிரதேசத்தினுள் அல்லது மடல்வரயாவினுள் கம்பப் பொறிவலை ஒன்றை (கட்டுதல்) நிருமாணித்தல் ஆகாது.*

*23. தேசிய நீர்வாழ் உயிரின வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையின் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் ஆராய்ச்சி நிறுவகத்தின் விதப்புரையின் மீது ஏதேனும் நிருவாக மாவட்டம் ஒன்றில் நிர்மாணிக்கப்படுவதற்கு கம்பப்பொறிவலையின் எண்ணிக்கையைக் (கட்டுதல்) பணிப்பாளர் தலைமையதிபதி தீர்மானித்தல் வேண்டும்.*

*24. கம்பப்பொறிவலை (கட்டுதல்) மற்றும் வலையின் வலைக் கண் அளவு என்பவற்றில் மீனை ஒன்றுசேர்ப்பதற்கான வழிகாட்டு வலையின் ஆகக்கூடிய நீளம் (முறையே எழுபத்தைந்து மீற்றர்களை* (75M) *விஞ்சுதலாகாது என்பதுடன் ஒன்றேகால் அங்குலத்துக்கு 1 1/4") குறைவாக இருத்தலும் ஆகாது.*

*25. இரண்டு கம்பப்பொறிவலைகளுக்கு (கட்டுதல்) இடையிலான தூரம் முன்னூறு மீற்றர்களுக்குக் குறைவாக இருத்தலாகாது.* (300m)

*26. ஏதேனும் கம்பப்பொறிவலை உரித்தை வைத்திருப்பவர் மேலேயுள்ள ஒழுங்குவிதிகளை மீறிச் செயலாற்றியிருப்பின் அத்தகைய கம்பப்பொறிவலை உரிமத்தை வைத்திருப்பவரின் உரிமம் அத்தகைய மீறுகை எண்பிக்கப்படுவதன் மீது பணிப்பாளர் தலைமையதிபதியினால் இரத்துச் செய்யப்படுதல் வேண்டும்.".*

*04-29*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.